

# தெய்வீக தயவு

*விசேஷித்த தயவை எதிர்பாருங்கள். உங்களுக்கு இன்னது நடக்க வேண்டும் என்று ஜனங்கள் நினைக்கும் நினைவுக்கு மாறான ஒன்றை தேவன் உங்களுக்குச் செய்வார்.*

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — Divine Favor)

# தெய்வீக தயவு

*விசேஷித்த தயவை எதிர்பாருங்கள். உங்களுக்கு இன்னது நடக்க வேண்டும் என்று ஜனங்கள் நினைக்கும் நினைவுக்கு மாறான ஒன்றை தேவன் உங்களுக்குச் செய்வார்.*

# பொருளடக்கம்

1. தெய்வீக தயவு என்றால் என்ன? 1

2. தேவ தயவு நம்மீது இருக்கும்போது என்ன நடக்கும்? 10

3. தேவ தயவை எது நம்மீது கொண்டுவருகிறது? 12

4. தேவ தயவுக்கு நேராக வழிநடத்தப்படுதல் 22

# 1

# தெய்வீக தயவு என்றால் என்ன?

தெய்வீக தயவு என்பது தேவன் தமது ஜனங்கள் மீது அருளும் ஒன்றாகும். இது அவர் நமக்கு அளிக்கும் ஆசீர்வாதங்களில் ஒன்று. இந்த ஆய்வில், தெய்வீக தயவு என்றால் என்ன, அது நம் வாழ்வில் எதைக் கொண்டுவருகிறது மற்றும் தெய்வீக தயவைப் பெற நாம் என்ன செய்யலாம் என்பதை ஆராய்வோம்.

- தெய்வீக தயவு என்றால் என்ன?
- தேவ தயவு நம்மீது இருக்கும்போது என்ன நடக்கும்?
- தேவ தயவை நம்மீது கொண்டுவருவது எது?

தெய்வீக தயவு என்பது ஒரு நபர் மீது பொழிந்தருளப்படும் தேவனுடைய ஈவாகும், மேலும் அது செல்வாக்கு, ஜனங்கள், இடங்கள் அல்லது காரியங்களை எளிதில் அணுகுவதற்கான வாய்ப்பையும், விசேஷித்த வாய்ப்புகள், மேன்மை மற்றும் தெய்வீக இடைபடுதல் ஆகியவற்றையும் அந்த நபருக்குத் தருகிறது.

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்று வேதம் சொல்கிறது (ரோமர் 2:11; அப்போஸ்தலர் 10:34).

**ரோமர் 2:11**
**தேவனிடத்தில் பட்சபாதமில்லை.**

**சங்கீதம் 34:8**
**கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**அப்போஸ்தலர் 10:34**
**அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி; தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்,**

தேவன் ஒவ்வொரு நபரையும் ஒரே மாதிரியாக நேசிக்கிறார் மற்றும் நபர்களை உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று மதிப்பிடுவதில்லை. இருப்பினும், மனுஷர்களை அவர் கையாளும்போது, தேவன் சில தனி நபர்களிடத்திலோ அல்லது ஜனக் குழுக்களின் மீதோ ஒரு சில குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட பருவங்களில் அல்லது அவர்களது வாழ்க்கையின் சில தருணங்களில் தெய்வீக தயவை வெளிப்படுத்துவதை நாம் காணலாம். இதற்காகத்தான், நாம் எதிர்பார்க்கும் வகையில் தேவனிடமிருந்து தெய்வீக தயவைப் பெற்றுக்கொள்வதற்கு நான் உங்களை விழிப்படையச் செய்ய விரும்புகிறேன்.

## தேவ தயவு ஜனங்கள் மீது வந்து இறங்கியதற்கான உதாரணங்கள்

### *நெகேமியா*

தெய்வீக தயவைப் பெற்ற ஒரு மனுஷனுக்கு நெகேமியா ஒரு உதாரணம். எருசலேமைத் தாக்கி அதைக் கைப்பற்றிய பாபிலோனிய ராஜாவான நேபுகாத்நேச்சாரின் கதையை வேதாகமம் பதிவு செய்கிறது (நெகேமியா 1,2). அவன் தேவாலயத்தையும் நகரத்தின் மதில்களையும் உடைத்து, ஏராளமான ஜனங்களைப் பாபிலோனுக்கு சிறைக் கைதிகளாக கொண்டு சென்றான். அங்கு பல மாற்றங்கள் நடந்தன. பாரசீகப் பேரரசு பாபிலோனியப் பேரரசை வென்றது. அந்த நேரத்தில் தேவனுடைய ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டனர், நெகேமியாவோ ராஜாவின் அரண்மனையில் ஒரு பானபாத்திரக்காரனாக பணியாற்றிக்கொண்டிருந்தான். ராஜா குடிக்க விரும்பியதை அவன் பரிமாறிக்கொண்டிருந்தான். அவன் அரண்மனையில் இருந்தபோது, எருசலேமில் என்ன நடந்துகொண்டிருந்தது

என்பது பற்றிய தகவல்கள் நெகேமியாவுக்கு வந்தன. அவனுடைய இருதயம் கலங்கியது, எருசலேமுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று அவன் உணர்ந்தான். "நான் திரும்பிச் சென்று எருசலேமின் மதில்களைத் திரும்பக் கட்ட வேண்டும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு அவன் ஜெபிக்க ஆரம்பித்தான்.

**நெகேமியா 1:11**

**ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்குப் பயப்பட வேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக. இன்றைக்கு உமது அடியானுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணி, இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும் என்று பிரார்த்தித்தேன். நான் ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்தேன்.**

ஆகவேதான், நெகேமியா ஜெபித்து, ராஜாவின் பார்வையில் தேவனுடைய இரக்கத்திற்காக வேண்டிக்கொண்டான். இது தெய்வீக தயவுக்கான ஜெபமாக இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, நெகேமியா அரண்மனைக்குத் திரும்பிச் செல்கிறான்.

**நெகேமியா 2:1-8**

**1 அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்சரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நான் அதை எடுத்து அவருக்குக் கொடுத்தேன். நான் முன் ஒருபோதும் அவர் சமுகத்தில் துக்கமாயிருந்ததில்லை.**

**2 அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார். அப்பொழுது நான் மிகவும் பயந்து,**

**3 ராஜாவை நோக்கி: ராஜா என்றைக்கும் வாழ்க. என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றேன்.**

**4 அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ கேட்கிற காரியம் என்ன என்றார். அப்பொழுது நான்: பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி**

**5 ராஜாவைப் பார்த்து: ராஜாவுக்குச் சித்தமாயிருந்து, அடியேனுக்கு**

**உமது சமுகத்தில் தயை கிடைத்ததானால், என் பிதாக்களின் கல்லறைகளிலிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி, யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேன் என்றேன்.**

**6 (அப்பொழுது ராஜஸ்திரீயும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.) ராஜா என்னைப் பார்த்து: உன் பிரயாணம் எத்தனை நாள் செல்லும், நீ எப்பொழுது திரும்பி வருவாய் என்று கேட்டார். இவ்வளவு காலம் செல்லுமென்று நான் ராஜாவுக்குச் சொன்னபோது, என்னை அனுப்ப அவருக்குச் சித்தமாயிற்று.**

**7 பின்னும் நான் ராஜாவைப் பார்த்து: ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், நான் யூதா தேசத்துக்குப் போய்ச் சேருமட்டும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு அவர்களுக்கு கடிதங்கள் கொடுக்கும்படிக்கு,**

**8 தேவாலயத்துக்கு இருக்கிற அரணின் கதவு வேலைக்கும், நகர அலங்கத்தின் வேலைக்கும், நான் தங்கப்போகிற வீட்டின் வேலைக்கும் வேண்டிய மரங்களை ராஜாவின் வனத்துக் காவலாளனாகிய ஆசாப் எனக்குக் கொடுக்கும்படிக்கும், அவனுக்கும் ஒரு கடிதம் கட்டளையிடப்படுவதாக என்றேன். என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார்.**

ராஜாவிடம் நெகேமியா என்ன கேட்டான் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். ராஜாவின் எதிரிகளிடம் திரும்பிச்செல்ல விரும்புவதாகவும், ராஜாவுக்கு எதிராகத் தங்களைத் தற்காத்துக்கொள்ளும்படி அவர்களை வலுப்படுத்த உதவ விரும்புவதாகவும் அவன் முக்கியமாக ராஜாவிடம் கூறினான்; ஏனெனில் அந்நாட்களில், நகரத்தின் மதில்கள்தான் பாதுகாப்புக்கான முதன்மை வழிகளில் ஒன்றாக இருந்தது. சுவர்கள் வலுவாகக் கட்டப்பட்டிருந்தால், தங்கள் எதிரிக்கு விரோதமாக அவர்களால் தங்களைத் தற்காத்துக்கொள்ள முடியும். இது நெகேமியாவிடமிருந்து வந்த ஒரு மூர்க்கத்தனமான கோரிக்கையாக இருந்தது. இருப்பினும், ராஜா அவனுக்கு எல்லாவற்றையும் வழங்கினார். நெகேமியா ஒரு பெரிய அரசியல்வாதியாகவோ அல்லது செல்வாக்கு மிக்க நபராகவோ இருக்கவில்லை; மாறாக, அரண்மனையில் ராஜாவுக்கு சேவை செய்யும் ஒரு வேலைக்காரனாக மட்டுமே இருந்தான் என்பதை நினைவில்

கொள்ளுங்கள். நெகேமியா புஸ்தகம் சுருக்கமாக, *“என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார்”* (நெகேமியா 2:8) என்று கூறுகிறது. எனவே, தேவனுடைய கரம் தன்மீது இருந்ததால் ராஜா இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றினார் என்று நெகேமியா அறிக்கையிட்டான். எனவே நெகேமியா எருசலேமுக்குத் திரும்பிவந்து, ஜனங்கள் படும் துயரத்தையும், எருசலேம் எவ்வாறு பாழடைந்துகொண்டிருந்தது என்பதையும் பார்க்கும்படி ஜனங்களுக்குச் சொன்னான்.

**நெகேமியா 2:18**
**என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன். அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.**

நெகேமியா தேவனுடைய தயவை இவ்வாறு அனுபவித்தது மட்டுமல்லாமல், மற்றவர்களிடம் அத்தகைய தயவைப் பற்றி சாட்சியளித்தான். அதனால், என்ன நடந்தது என்றால், நெகேமியாவின் மீது இருந்த தேவ தயவு ஜனங்களை அவனுக்கு நேராக ஈர்த்தது. மற்றவர்கள் நெகேமியாவுடன் தொடர்புகொள்ளவும் அவனது ஊழியத்தில் ஒரு பங்காக இருக்கவும் விரும்பினர்! இன்றும் கூட தேவனுடைய தயவு உங்களுக்கும் எனக்கும் இதைத்தான் செய்யும்!

நெகேமியா தேவனுடைய தயவைப் பெற்று வாழ்ந்தான், அது மற்றவர்களின் இருதயங்களிலும் அத்தகைய தைரியத்தை உருவாக்கியது; எதிர்ப்பு இருந்தபோதிலும், அவர்கள் அனைவரும், *“...பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார். அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம். ....”* (நெகேமியா 2:20) என்று எதிர்ப்பிற்கு

பதிலளித்தனர். இவ்வாறு, அவர்கள் தெய்வீக தயவின் பருவத்தில் இருப்பதை அறிந்தார்கள், மேலும் தேவன் தங்கள் மத்தியில் என்ன செய்துகொண்டிருந்தார் என்பதை உணர்ந்தார்கள். தேவனுடைய தயவுள்ள கரம் தங்கள் மீது நன்மையாக இருப்பதாக அவர்கள் விசுவாசித்தனர், மற்றும் ஜனங்கள் என்ன சொன்னாலும், அவர்கள் எழுந்து கட்ட சென்றனர்.

## *யோசேப்பு*

யோசேப்பு எகிப்திற்கு அடிமையாக செல்லும்படி தன் சகோதரர்களால் விற்கப்பட்ட சம்பவம் ஆதியாகமம் 39வது அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**ஆதியாகமம் 39:21-23**

**21 கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன் மேல் கிருபை வைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்.**

**22 சிறைச்சாலைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான். அங்கே அவர்கள் செய்வதெல்லாவற்றையும் யோசேப்பு செய்வித்தான்.**

**23 கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை.**

அப்படியானால், சிறைச்சாலையில் கூட, சிறைக்காவலன் யோசேப்பை தலைமைப் பொறுப்பை ஏற்கச் சொல்கிறான். இதுவே தெய்வீக தயவாகும். யோசேப்பு தன்னையும் மற்ற கைதிகளையும் விடுவிப்பான் என்று காவலாளி ஒரு கணம் கூட நினைத்துப் பார்த்ததில்லை. சிறைச்சாலையில் ஒரு கைதி தனது சொந்த அறையை மேற்பார்வையிடுவதை கற்பனை செய்து பாருங்கள்!

**அப்போஸ்தலர் 7:9,10**

**9 அந்தக் கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை**

**எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள்.**
**[10]தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார். அந்த ராஜா அவனை எகிப்து தேசத்திற்கும் தன் வீடனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினார்.**

தேவன் யோசேப்புக்கு தயவு பாராட்டினார். ஒரே இரவில், அவன் கைதியாக இருந்த நிலையிலிருந்து எகிப்தின் பிரதம மந்திரியாக மாறினான். தேவனுடைய தயவு நம் வாழ்வில் செய்வது இதுதான். ஒரே நொடியில் அனைத்தும் மாறக் கூடும்.

## *எகிப்தில் இருந்த இஸ்ரவேல் ஜனங்கள்*

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் 400 ஆண்டுகள் அடிமைகளாக இருந்தனர். மோசேயின் ஊழிய கால தொடக்கத்தில் தேவன் அவனுடன் பேசி, *"அப்பொழுது இந்த ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கப் பண்ணுவேன். நீங்கள் போகும்போது வெறுமையாய்ப் போவதில்லை. ஒவ்வொரு ஸ்திரீயும், தன்தன் அயலகத்தாளிடத்திலும் தன்தன் வீட்டில் தங்குகிறவளிடத்திலும், வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டு வாங்குவாள். அவைகளை உங்கள் குமாரருக்கும் உங்கள் குமாரத்திகளுக்கும் தரிப்பித்து, எகிப்தியரைக் கொள்ளையிடுவீர்கள்"* (யாத்திராகமம் 3:21,22) என்றார். இஸ்ரவேல் ஜனங்களை இத்தனை வருடங்களாக அடிமைகளாக வைத்திருந்த எகிப்தியர்களின் கண்களில், அவர்களுக்கு தயவு கிடைக்கப்பண்ணுவேன் என்று தேவன் மோசேயிடம் கூறுகிறார். இந்த ஜனங்களை எகிப்திலிருந்து வெளியேற்றும் நேரம் வரும்போது, அவர்கள் மோசேயால் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று மோசேயிடம் கூறுகிறார். தேவ தயவு இஸ்ரவேலர்கள் மீது இருப்பதால் அவர்கள் எகிப்தை

விட்டு வெறுங்கையுடன் வெளியேற மாட்டார்கள் என்று தேவன் மோசேயிடம் தெளிவாகக் கூறுகிறார்.

**யாத்திராகமம் 11:3**
**அப்படியே கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்தார். மோசே என்பவன் எகிப்து தேசத்தில் பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் ஜனங்களின் பார்வைக்கும் மிகவும் பெரியவனாயிருந்தான்.**

திடீரென்று, எகிப்தியர்களின் கருத்துக்களும், பார்வைகளும் மற்றும் அவர்கள் இஸ்ரவேலர்களுக்குச் செய்ய விரும்பினதும் மாறிவிட்டது. கர்த்தர் எகிப்தியர்களுக்கு முன்பாக இஸ்ரவேலர்களுக்கு அப்படியே தயவை வழங்கினார். அனைத்து சூழ்நிலைகளும் மாறிவிட்டன!

**யாத்திராகமம் 12:35-37**
**35 மோசே சொல்லியிருந்தபடி இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரிடத்தில் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டார்கள்.**
**36 கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள். இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்.**
**37 இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம்பண்ணி, சுக்கோத்துக்குப் போனார்கள். அவர்கள், பிள்ளைகள் தவிர ஆறுலட்சம் புருஷராயிருந்தார்கள்.**

மேலும், எகிப்தியர்களின் கண்களில் அவர்களுக்கு தெய்வீக தயவு கிடைத்ததன் நிமித்தமாக, இஸ்ரவேலர்கள் விரும்பிய அனைத்தையும் எகிப்தியர்கள் வழங்கினார்கள். இவ்வாறு அவர்கள் உண்மையிலேயே எகிப்தியர்களைக் கொள்ளையடித்தனர். உங்கள் “வீட்டு வேலைக்காரி” வந்து, உங்கள் தங்கம் மற்றும் உடைகள் அனைத்தையும் அவளுக்குக் கொடுக்கும்படி கேட்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். அவள் பைத்தியமாகிவிட்டாள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் 400 வருட அடிமைத்தனத்திற்குப் பிறகு இஸ்ரவேலர்கள் எகிப்தியர்களிடம் கேட்டது இதுதான்.

தெய்வீக தயவு கிடைக்கப் பெற்ற அந்தத் தருணத்தில், எகிப்தியர்களின் கைகளிலிருந்து இஸ்ரவேலர்களின் கைகளுக்கு செல்வம் மாற்றப்பட்டது. இவை அனைத்தும் ஒரே இரவில் நடந்தன.

இன்று உங்களுக்கும் எனக்கும் தேவன் அப்படியே செய்வார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? உங்கள் வாழ்க்கையிலும் என் வாழ்க்கையிலும் தெய்வீக தயவின் பருவங்களை அல்லது தெய்வீக தயவின் தருணங்களை தேவனால் அனுப்ப முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? தேவனால் அனுப்ப முடியும் என்று நான் நம்புகிறேன்! காலம் மாறிவிட்டது. ஜனங்கள் மாறிவிட்டனர். ஆனால் நம் தேவன் தமது ஜனங்கள் மீது தெய்வீக தயவைத் தொடர்ந்து அனுப்பும் தேவனாக இருக்கிறார். அவர் தமது ஜனங்களுக்கு தயவு அளித்து காரியங்களை வாய்க்கப்பண்ணுகிறார்; இல்லையெனில், அவை ஒருபோதும் நடக்காது.

# 2

# தேவ தயவு நம்மீது இருக்கும்போது என்ன நடக்கும்?

## ஜனங்கள் மத்தியில் செல்வாக்கு

தெய்வீகதயவானது ஜனங்கள் மத்தியில் நமக்கு செல்வாக்கை அளிக்கிறது. நெகேமியா ஒரு "அறியப்படாத நபராக" இருந்தான். யோசேப்பு ஒரு சிறைச்சாலைக் கைதியாக இருந்தான். இஸ்ரவேலர்கள் அடிமைகளாக இருந்தனர். ஆனால் தேவனுடைய தயவு அவர்கள் மீது வந்தபோது, அவர்கள் செல்வாக்கைப் பெற்றனர். அவர்களால் பேச முடிந்தது மற்றும் காரியங்கள் அவர்களுக்குச் சாதகமாக நடந்தன.

## ஜனங்கள், இடங்கள் அல்லது காரியங்களை அணுகலாம்

தேவனுடைய தயவு மனுஷர்களையும், இடங்களையும் மற்றும் காரியங்களையும் எளிதாக அணுகுவதற்கு நமக்கு உதவுகிறது. திடீரென்று, தேவன் நம் வாழ்வில் தெய்வீக தயவை வெளிப்படுத்தும்போது, சரியான நபர்களை, சரியான இடங்களை, சரியான காரியங்களை அல்லது செல்வத்தை அணுக நமக்கு உதவுகிறார்.

## விசேஷித்த வாய்ப்புகள்

தேவனுடைய தயவு நம் வாழ்வில் அசாதாரண வாய்ப்புகளை - அதாவது, மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்புகளைக் கொண்டுவருகிறது.

## உயர்வைத் தருகிறது

**சங்கீதம் 89:17**

**நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர், உம்முடைய தயவினால் எங்கள் கொம்பு உயரும்.**

"கொம்பு" என்ற சொல்லுக்கு "தலைவன்" என்று பொருள். அப்படியானால், தேவனுடைய தயவு நமக்கு உயர்வைத் தருகிறது.

## ஜீவனை வழங்குகிறது

தேவன் தம்முடைய தயவை அளிக்கும்போது, மரித்துக்கொண்டிருக்கும் ஒன்று திடீரென்று உயிர்ப்பிக்கப்படுகிறது. தேவனுடைய தயவு நம்மீது வெளிப்படும்போது, நம் வாழ்வில் சூழ்நிலைகள் தலைகீழாக மாறிவிடும்.

**சங்கீதம் 30:5**

**அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு, சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.**

**சங்கீதம் 30:11**

**என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர், என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்.**

# 3

# தேவ தயவை எது நம்மீது கொண்டுவருகிறது?

ஒரு நபரின் வாழ்க்கையில் தெய்வீக தயவை வருவிக்க எது காரணமாய் அமைகிறது? குறிப்பிட்ட கால கட்டத்தில் குறிப்பிட்ட சிலருக்கு தெய்வீக தயவு ஏன் கிடைக்கிறது? வேதாகமத்தைப் படித்ததன் மூலம் நான் கண்டறிந்த சில பதில்களை இங்கே காணலாம்.

## நம் பணியுடன் தயவு இணைக்கப்பட்டுள்ளது

தேவனுடைய தயவு எப்போதும் நம் பணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நம் ஒவ்வொருவருக்கும் தேவனிடமிருந்து ஒரு பணி நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் நாம் நமது பணிகளுக்குச் செல்லும்போதெல்லாம், தேவ தயவு நம்மீது வருகிறது.

வேதாகமத்திலிருந்து சில உதாரணங்களை இங்கே காணலாம்.

### *மரியாள்*

**லூக்கா 1:30**

**தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.**

மேசியாவின் பிறப்புக்கான வாகனமாக ஏதோ ஒரு இளம் கன்னிகையை தேவன் தேர்ந்தெடுத்திருக்க முடியும். ஆனால் அவர் மரியாளைத்தான் தெரிந்துகொண்டார். மேசியாவைப் பெற்றெடுக்கும் ஒரு குறிப்பிட்ட பணிக்காக அவள் "தயவு பெற்றவள்" ஆனாள்.

## *இயேசு*

**லூக்கா 2:52**

**இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.**

## *நெகேமியா*

நெகேமியா ஏன் தெய்வீக தயவை உணர்ந்தான்? அவன் எருசலேமின் மதில்களை மறுபடியும் புதுப்பித்துக் கட்டும் பணியில் ஈடுபடும்படிக்கு ஏவப்பட்டான். அதனால்தான் நெகேமியா தெய்வீக தயவை உணர்ந்தான்.

## *யோசேப்பு*

யோசேப்பு ஏன் தெய்வீக தயவைப் பெற்றான்? அவன் தன் சொப்பனத்தை நனவாக்கும் வகையில் தனது ஜனங்களுக்கு விடுதலையைக் கொண்டுவருவதற்காக தான் பிரதமராகும் ஊழியத்திற்கு நேராக ஏவப்பட்டான்.

## *எஸ்தர்*

யூத ஜனங்களுக்கு விடுதலையைக் கொண்டுவரும் பணியை எஸ்தர் பெற்றிருந்ததால் தெய்வீக தயவை உணர்ந்தாள். எஸ்தர் ஒரு அனாதையாக இருந்தாள். அவள் தன் வாழ்க்கையில் அறியப்படாத ஒரு நபராக மாண்டுபோயிருந்திருப்பாள். ஆனால் தேவனுடைய தயவு அவள் மீது இருந்தது. அவள் அகாஸ்வேரு ராஜாவுக்கு ராணியாகும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். எஸ்தர், சரியான நேரத்தில் ராஜாவிடம் ஒரு வேண்டுகோள் வைக்கச் சென்றபோது, அவள் நீதிமன்றத்தின் முற்றத்தில் நின்றுகொண்டிருந்ததை ராஜா கண்டார். அவருடைய பார்வையில் அவளுக்கு தயவு கிடைத்தது. எனவே, தன் கையில் இருந்த பொற்செங்கோலை அவர் நீட்டினார். பின்னர் எஸ்தர் அருகில் சென்று அந்தச் செங்கோலின் நுனியைத் தொட்டாள். ராஜா அவளிடம், *"எஸ்தர் ராஜாத்தியே, உனக்கு என்ன வேண்டும்? உன் கோரிக்கை*

*என்ன? அது உனக்குக் கொடுக்கப்படும். ராஜ்யத்தில் பாதியாக இருந்தாலும் அது உனக்குக் கொடுக்கப்படும்!"* (எஸ்தர் 5: 3) என்று சொன்னார். இவ்வாறு, அவள் ஒரு குறிப்பிட்ட பணியைத் தொடர்ந்ததால், தேவனுடைய தயவு அவள் மீது இருந்தது. பிறகுதான், தேவனுடைய ஜனங்களுக்கு விடுதலையைக் கொண்டுவரும் ஒரு பணியைச் செய்துகொண்டிருந்ததை எஸ்தர் உணர்ந்தாள்.

எனவே, நாம் நம்முடைய பணிகளைச் செய்துகொண்டிருக்கும்போதெல்லாம், தேவ தயவு நம்மீது வரும். இதன் பொருள் என்னவென்றால், நாம் நம்முடைய சொந்த பணியைச் செய்தால், இந்த தெய்வீக தருணங்களைப் பெறுவதற்கு அது நம்மைத் தகுதியற்றவர்களாக்குகிறது. இருப்பினும், நாம் தேவனுடைய பணிகளைத் தொடர்ந்து செய்யும்போது, அவருடைய தெய்வீக தயவைப் பெற நாம் பாத்திரவான்களாக மாறுகிறோம். நம் வாழ்விற்காக நாம் நிறைவேற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிற பணிகளை அவர் கொண்டிருப்பதால், தேவன் அந்த தயவை வெளிப்படுத்துகிறார். அதனால்தான், சில நேரங்களில், எதிர்பாராத கதவுகள் திறக்கப்பட்டு, பிறரால் அணுக முடியாத நபர்களையும், இடங்களையும் மற்றும் காரியங்களையும் நம்மால் அணுக முடிகிறது. சில நேரங்களில், செல்வம் நம் கைகளுக்கு வருவதை நாம் காண்கிறோம். மற்ற நேரங்களில், "நாங்கள் அந்த ஊழியத்தின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறோம்" என்று கூறி, நம் செல்வாக்கின் கீழ் வரும் நபர்களைக் காண்போம். இது நம் வாழ்வில் பொழிந்தருளப்படும் தெய்வீக தயவாகும்.

ஆனால், தெய்வீக தயவு கிடைக்கும் அந்த ஒரு நொடிப்பொழுது அல்லது பருவத்திற்குப் பிறகும் கூட, நாம் தொடர்ந்து உழைக்க வேண்டும் என்பதையும், தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பணியை நோக்கிச் செயல்பட வழக்கம்போல செய்ய வேண்டிய அனைத்தையும் நாம் செய்ய

வேண்டும் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும். தெய்வீக தயவின் ஒரு தருணத்தில்தான், நெகேமியாவின் அனைத்து கோரிக்கைகளையும் ராஜா நிறைவேற்றினார். ஆனால் அதை நிறைவேற்ற நெகேமியா கடின உழைப்புடன் அதைப் பின்பற்ற வேண்டியிருந்தது, நிறைய எதிர்ப்புகள், பொய்யான குற்றச்சாட்டுகள், உட்பூசல் மற்றும் பலவற்றைக் கடந்து பணி நிறைவேறும்வரை உழைக்க வேண்டியிருந்தது.

உங்கள் வாழ்க்கையில் பொழிந்தருளப்பட்ட தேவனுடைய தயவை வீணாக்காமல் இருப்பதில் கவனமாக இருங்கள். தேவன் தனக்குப் பாராட்டிய நல்ல தயவை சவுல் வீணடித்தார். மேலும் அந்தப் பணியை நிறைவேற்ற தேவன் (தாவீது என்னும்) வேறொருவனைத் தேடினார்.

**1 சாமுவேல் 15:10,11,16-22**

**10 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்கு உண்டாகி, அவர் சொன்னது:**

**11 நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. அவன் என்னை விட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார். அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.**

**16 அப்பொழுது சாமுவேல்: அந்தப் பேச்சை விடும். கர்த்தர் இந்த இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன் என்று சவுலோடே சொன்னான். அவன் சொல்லும் என்றான்.**

**17 அப்பொழுது சாமுவேல்: நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர். கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே.**

**18 இப்போதும் கர்த்தர்: நீ போய் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கித் தீருமட்டும், அவர்களோடு யுத்தம்பண்ணு என்று சொல்லி, உம்மை அந்த வழியாய் அனுப்பினார்.**

**19 இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக் கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்.**

**20 சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போய், அமலேக்கின்**

**ராஜாவாகிய ஆகாகைக் கொண்டு வந்து, அமலேக்கியரைச் சங்காரம் பண்ணினேன்.**

**21 ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றான்.**

**22 அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்.**

## தயவு குறிப்பிட்ட நேரத்துடன் தொடர்புடையது

**சங்கீதம் 102:13**

**தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர், அதற்குத் தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது.**

நம் வாழ்வில் ஒரு குறிப்பிட்ட பணிக்காக தேவனுடைய தயவு நம்மீது பொழிந்தருளப்படுவதற்கான சில குறிப்பிட்ட நேரங்கள் உள்ளன. நம் வாழ்வில் தெய்வீக தயவு வெளிப்படும் ஒரு நேரம், அதாவது ஒரு தருணம் இருக்கிறது, ஒன்றுமே செய்யாதபோதிலும் அத்தகைய தயவை நாம் எப்படி அனுபவிக்க முடியும் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். அதுவே தயவு வெளிப்படும் பருவம்! நம் காலங்கள் அவர் கரத்தில் இருக்கிறது (சங்கீதம் 31:15).

இந்த தயவைப் பெற்றுக்கொள்ளும் காலங்களுக்கு இடைப்பட்ட காலம், நம் வாழ்வில் வரப்போகும் தயவை கையாள நம்மை ஆயத்தப்படுத்தும் காலங்களாய் இருக்கின்றன. இதற்கிடையில், நமக்குக் கொடுக்கப்பட்ட பணிக்கு நாம் உண்மையாக இருக்க வேண்டும் மற்றும் பணியை நிறைவேற்ற நமக்கு அளிக்கப்பட்ட கிருபையில் வழக்கம்போல தொடர்ந்து பணியாற்ற வேண்டும். மேலும் நாம் தயவைப் பெற்றுக்கொள்ளும்போது, அதைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது; அப்போது, நம் வாழ்வில் தேவனுடைய தயவு பொழிந்தருளப்படும் அடுத்த

பொழிந்தருளப்படுதலுக்கு நாம் ஆயத்தமாக இருக்க முடியும்.

## தயவு என்பது நீதியுடன் தொடர்புடையது

**சங்கீதம் 5:12**

**கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து,**
**காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர்.**

**தானியேல் 9:23**

**நீ மிகவும் பிரியமானவன். ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன். இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக் கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்.**

**தானியேல் 10:11,19**

**11 அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே,**
**நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால்,**
**நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின்பேரில் நீ கவனமாயிருந்து,**
**கால் ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில்**
**சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன்.**
**19 பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக,**
**திடங்கொள், திடங்கொள் என்றான். இப்படி அவன் என்னோடே**
**பேசுகையில் நான் திடங்கொண்டு அவனை நோக்கி: என் ஆண்டவன்**
**பேசுவாராக. என்னைத் திடப்படுத்தினீரே என்றேன்.**

தயவு என்பது நீதியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. நீதிக்காக நின்ற ஒரு மனுஷனுக்கு தானியேல் ஒரு சிறந்த உதாரணமாக இருக்கிறான். இக்கட்டான சூழ்நிலைகளில் அவன் செம்மையாக நடந்தான். தேவன் அவனை "மிகவும் பிரியமானவன்" என்று அழைத்தார். தேவன் நீதிமான்களை ஆசீர்வதிப்பார். அவர் அவர்களைக் காருண்யம் எனும் கேடகத்தினால் சூழ்ந்துகொள்வார் (சங்கீதம் 5:12). எனவே, நாம் நீதியில் நடக்கும்போது, தெய்வீக தயவால் சூழப்பட்டிருக்கிறோம். எனவே, யார் நம்மைச் சந்தித்தாலும், அவர்கள் கண்ணுக்குத் தெரியாத இந்த தயையுடன் தொடர்புகொள்வார்கள் - இது தயவு

எனும் ஒரு கேடயமாகும்.

**நீதிமொழிகள் 3:3,4**
**3 கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக: நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.**
**4 அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்.**

**நீதிமொழிகள் 12:2**
**நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான்: துர்ச்சிந்தனையுள்ள மனுஷனை அவர் ஆக்கினைக்குட்படுத்துவார்.**

உண்மையிலேயே நம் இருதயத்தில் இரண்டு விஷயங்களை நாம் வைத்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

1) இரக்கம், இது மனதுருக்கத்தைக் குறிக்கிறது, மற்றும்
2) உண்மை, இது உத்தமம், செம்மை மற்றும் நேர்மையைக் குறிக்கிறது.

இந்த இரண்டு விஷயங்களையும் நாம் கைக்கொண்டு வாழ்ந்தால், தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக நாம் தயவையும் மேலான மதிப்பையும் பெறுகிறோம் என்று தேவன் கூறுகிறார். எனவே, நாம் இரக்கமுள்ளவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கும்போதுதான், நம் வாழ்வில் தயவு கிடைக்கப்பெறுகிறது.

## தயவு என்பது ஞானம் மற்றும் நற்புத்தியுடன் தொடர்புடையதாக இருக்கிறது

**நீதிமொழிகள் 8:35**
**என்னைக் (ஞானம்) கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான்: கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான்.**

**நீதிமொழிகள் 13:15**
**நற்புத்தி தயையை உண்டாக்கும்: துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது.**

**நீதிமொழிகள் 14:35**
**ராஜாவின் தயை விவேகமுள்ள பணிவிடைக்காரன்மேலிருக்கும்: அவனுடைய கோபமோ இலச்சையுண்டாக்குகிறவன்மேலிருக்கும்.**

தயவு என்பது ஞானம் மற்றும் நற்புத்தியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. ஏனென்றால், நாம் ஞானத்துடனும் நற்புத்தியுடனும் நடப்பதைத் தேர்ந்தெடுக்கும்போது, நாம் ஜீவனைக் கண்டடைந்து தயவைப் பெறுகிறோம். அவர் நமக்குக் கொடுப்பதை நாம் சரியாகக் கையாள்வோம் என்று தேவன் அறிந்தால், நமக்கு தயவை அருளுவார். எனவே, நாம் ஞானமும் நற்புத்தியும் மிகவும் முக்கியமானது என்பதை கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு நம் வாழ்வில் நாம் தேவனுடைய தயவைப் பெறுவதற்கு நம்மை நிலைநிறுத்த வேண்டும்.

**சங்கீதம் 106:5**
**உம்முடைய ஜனங்களுக்கு நீர் பாராட்டும் கிருபையின்படி என்னை நினைத்து, உம்முடைய இரட்சிப்பினால் என்னைச் சந்தித்தருளும்.**

**சங்கீதம் 119:58**
**முழு இருதயத்தோடும் உம்முடைய தயவுக்காகக் கெஞ்சுகிறேன், உமது வாக்கின்படி எனக்கு இரங்கும்.**

**நீதிமொழிகள் 22:1**
**திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது: பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்.**

பின்வருவனவற்றைச் செய்ய நான் உங்களை ஊக்குவிக்கிறேன்:

- தெய்வீக தயவுக்காக ஜெபியுங்கள்.

- தெய்வீக தயவுக்காக உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.
- தெய்வீக தயவைப் பெற்றுக்கொள்ள எதிர்பாருங்கள்.

தயவைப் பெற்றுக்கொள்ளும்படி உங்கள் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் மன்றாடுங்கள், ஏனென்றால் இந்த தெய்வீக தயவு உங்கள் வாழ்க்கையில் அற்புதமான விஷயங்களைச் செய்யும். தயவைப் பெறும் தருணங்களில், தயவைப் பெறும் பருவங்களில், பணத்தால் விலை கொடுத்து வாங்க முடியாத பொருட்களை உங்களால் பெற முடியும். சிறைச்சாலையிலிருந்து பிரதமராக மாற்றப்படுவதற்கு யோசேப்பு எவ்வளவு பணம் கொடுத்திருக்க முடியும்? எஸ்தர் ராஜாத்தியாக வருவதற்கு என்ன விலை கொடுத்திருக்க முடியும்? ராஜாவிடம் தனது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு நெகேமியா எவ்வளவு பணம் கொடுத்திருக்க முடியும்?

உங்களின் வேலை, தொழில், வியாபாரம், ஊழியம், கல்வி அல்லது வேறு எந்த துறையாக இருந்தாலும் சரி, உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய தயவைப் பொழிந்தருளும்படி கேளுங்கள். நீங்கள் கர்த்தரிடத்தில் மன்றாடலாம். அந்த தயவு உங்கள் மீது பொழிந்தருளப்பட்டால், ஒரு நொடியில், அசாதாரணமான விஷயங்கள் நடக்கும், வாய்ப்புகள் உருவாகும், உங்கள் சூழ்நிலைகள் மாறும்; மேலும் அவர் உங்கள் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார். (சங்கீதம் 30:11).

## ஜெபம்

*சர்வவல்லமையுள்ள தேவனே,*

*நான் ஞானத்துடனும் நீதியுடனும் நடந்துகொள்ளுவேன். நான் தெய்வீக தயவைப் பெற என்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறேன், தெய்வீக தயவைப்*

*பெற எதிர்பார்க்கிறேன்! மேலும், தயவைப் பெற்றுக்கொள்ளும் காலங்களுக்கு இடைப்பட்ட காலங்களில், நான் உமது அழைப்புக்கு உண்மையாக இருப்பேன். திடீரென்று காரியங்கள் மாறும்போது என் வாழ்க்கைக்காக நீர் வைத்திருக்கும் தயவின் அடுத்த கால கட்டத்தை நான் இழந்துவிட விரும்பவில்லை.*

*இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்!*

# 4

# தேவ தயவுக்கு நேராக வழிநடத்தப்படுதல்

நம் வாழ்வில் தேவனுடைய தயவைப் பெறுவதென்பது கிருபை நம்மீது செயல்படுவதாகும். தேவன் நம்மீது தம்முடைய தயவை நீட்டிக்கிறார். நாம் அதைப் பெறுவதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறோம். இருப்பினும், அதற்குப் பிறகு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும். தேவனுடைய தயவை நாம் எவ்வாறு பின்பற்றிச் செல்கிறோம் என்பதுதான் நமது பணிகளில் நாம் முன்னேறுகிறோமா மற்றும் தேவனுடைய நோக்கங்கள் இறுதியில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைத் தீர்மானிக்கும். மேலும், தேவனுடைய தயவை முறையாகப் பின்பற்றுவதே, தொடர்ந்து தயவை பெற்றுக்கொள்ள முடியுமா என்பதைத் தீர்மானிக்கும்; ஏனெனில், அவருடைய ராஜ்யத்தில், கொஞ்சத்தில் உண்மையாக இருப்பதுதான் நாம் இன்னும் அதிகமாகப் பெறுவதற்கு உதவுகிறது.

வேதாகமத்தில், தெய்வீக தயவிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக இருந்த சிலரைக் காண்கிறோம். ஒரு சில உதாரணங்களுக்கு ஆதாரமாக யோசேப்பு, தெய்வீக தயவைப் பெற்று, அந்நிய தேசத்தில் பிரதம மந்திரியாகி, கர்த்தருக்கு உண்மையாக இருந்து, தன்னுடைய பணியைச் செய்து, தனக்கு அநீதி இழைத்த தனது சகோதரர்களுக்கும் அந்த தயவைக் கொடுத்தான்.

தாவீது தெய்வீக தயவை அனுபவித்தான், அது அவனை சாதாரண ஒரு மேய்ப்பனாக இருப்பதிலிருந்து இஸ்ரவேலில் ஒரு பலமுள்ள ராஜாவாக ஆக்கியது. தன் வாழ்வில்

தவறுகள் செய்திருந்தாலும் கூட இறுதிவரை கர்த்தரிடத்தில் அன்புடனும் பயபக்தியுடனும் நடந்தான். அவன் தன்னைச் சுற்றியுள்ள ஜனங்களைக் கனம்பண்ணினான் மற்றும் தேவன் தனது வாழ்க்கையில் வழங்கிய தயவின் அளவுக்குத்தக்கதாக நல்ல உக்கிராணக்காரனாக இருந்தான்.

நெகேமியா மற்றொருசிறந்த உதாரணமாக இருக்கிறான். எருசலேம் நகரின் மதில்கள் மீண்டும் கட்டப்பட்டு, தலைவனாக (ஆளுநராக) அங்கீகரிக்கப்பட்ட பிறகும், அவன் அனுபவிக்கக்கூடிய சலுகைகளை அனுபவிக்க மறுத்துவிட்டான். தன்னுடைய சொந்த வார்த்தைகளில், *"நான் யூதா தேசத்திலே அதிபதியாயிருக்கும்படி ராஜாவாகிய அர்தசஷ்டா எனக்குக் கற்பித்த நாளாகிய அவருடைய இருபதாம் வருஷம் தொடங்கி, அவருடைய முப்பத்திரண்டாம் வருஷம்வரைக்கும்மிருந்த பன்னிரண்டு வருஷகாலமாய், நானும் என் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கிச் சாப்பிடவில்லை. எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கிவந்தார்கள். அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள். நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை. நாளொன்றுக்கு ஒரு காளையும், முதல்தரமான ஆறு ஆடும் சமைக்கப்பட்டது. பத்து நாளைக்கு ஒருதரம் நானாவிதத் திராட்சரசமும் செலவழிந்தது. இப்படியெல்லாம் இருந்தபோதும், இந்த ஜனங்கள் பட்டபாடு கடினமாயிருந்தபடியால், அதிபதிகள் வாங்குகிற படியை நான் வாங்கவில்லை"* என்று அவன் கூறுகிறான் (நெகேமியா 5:14,15,18).

எஸ்தர் தெய்வீக தயவை அனுபவித்து ராஜாத்தியானாள். தேவனுடைய ஜனங்களுக்காக அவள் தன் உயிரையும்

செல்வாக்கு நிறைந்த இடத்தையும் முழுமனதோடு பணயம் வைத்தாள்.

இதைப்போலவே, தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய தயவிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக இருந்த பலர் உள்ளனர்.

இருந்தபோதிலும், தேவன் அளித்த தயவை வீணடித்தவர்களையும் நாம் பார்க்கிறோம். மிகுந்த ஞானம், ஐசுவரியம், செல்வாக்கு மற்றும் சமாதானம் ஆகியவற்றை அனுபவிக்கும்படி, தேவனால் தயவு பெற்ற சாலொமோன் ராஜா, பெண்கள் மீதான நேசத்தால் வழிதவறிப்போனார். இது அழிவை ஏற்படுத்தியது; அப்படிப் போகாதிருந்தால், இஸ்ரேவேல் தேசத்தில் புகழ்பெற்ற ஆட்சியை அவரால் நிலைநாட்ட முடிந்திருக்கும். எசேக்கியா ராஜா யூதா தேசத்தில் ஒரு நல்ல ராஜாவாக இருந்தார்; அவர் நீதியின் மறுமலர்ச்சியையும் ஜனங்கள் கர்த்தரிடம் திரும்புவதையும் கண்டார். *"ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார், அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று"* (2 இராஜாக்கள் 18:7a). தேவன் அவனுக்கு மகத்தான விடுதலையையும் வெற்றியையும் கொடுத்ததை அவன் கண்டான். ஆயினும்கூட, அவன் தனது ராஜ்யபாரத்தின் முடிவு காலத்தில் ஒரு பெரிய தவறு செய்துவிட்டான். தேவன் தன்னிடம் ஒப்படைத்ததை அவன் பாதுகாக்கவில்லை, அதை அடுத்த தலைமுறைக்கு மரபுரிமையாகக் கொடுக்கவில்லை. அதற்குப்பதிலாக, அவன் யூதா தேசத்தின் இரகசிய விஷயங்களை பாபிலோன் ராஜாவுக்கு அம்பலப்படுத்தினான். அது இறுதியில் பாபிலோனியர்களால் தேசம் சிறைபிடிக்கப்படுவதற்கு வழிவகுத்தது (2 இராஜாக்கள் 20:12-20).

தேவன் நம் வாழ்வில் பொழிந்தருளும் தயவைச் சரியாக பயன்படுத்திக்கொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய சில

முக்கியமான விஷயங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

## தேவனுக்கு எல்லா மகிமையையும் செலுத்துங்கள்

**சங்கீதம் 115:1**

**எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்.**

நம் வாழ்வில் தேவனுடைய தயவைப் பெறுபவர்களாக, அவர் மீது நம் கண்களை வைத்திருப்பதை உறுதிசெய்துகொண்டு, அவருடைய இரக்கத்தினால் நாம் பெற்றுக்கொண்டதாகக் கருதுபவைகளுக்காக அவருக்கு துதியையும், கனத்தையும், மகிமையையும் செலுத்த வேண்டும்.

## தெய்வீக ஆசீர்வாதத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள்

**நெகேமியா 8:10**

**பின்னும் அவன் அவர்களை நோக்கி: நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள். இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்பட வேண்டாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.**

தேவனுடைய தயவை நாம் அனுபவிக்கும்போது, நம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் அதைப் பகிர்ந்துகொள்ள மறக்கக்கூடாது. நம்மைச் சுற்றியிருக்கும் சிலர் வாழ்க்கையின் வெவ்வேறு பருவங்களை- அதாவது, ஒருவேளை சில போராட்டங்கள், சில தேவைகள் மற்றும் சவால்களைச் சந்தித்துக்கொண்டிருக்கலாம். நம் வாழ்வில் உள்ள நன்மைகளை அவர்களின் வாழ்வில் நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும். நாம் ஒரு ஆசீர்வாதமான பாத்திரமாக இருக்கும்படிக்கு தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

### தேவனுடைய தயவை துஷ்பிரயோகம் செய்யாதீர்கள்

நம்மீது மட்டும் மிகுதியாக இருக்க வேண்டும் என்பதற்காக தேவனுடைய தயவு கொடுக்கப்படுவதில்லை. தேவன் நம்மிடம் ஒப்படைத்ததை நாம் துஷ்பிரயோகம் செய்யவோ அல்லதுதவறாகப்பயன்படுத்தவோகூடாது.நம்மீதுஇருக்கிற தேவனுடைய தயவு மற்றவர்களை விட நாம் சிறந்தவர்களாய் இருக்கிறோம் என்று காட்டிக்கொள்வதற்காக அல்ல. நம்மீது இருக்கிற தேவனுடைய தயவு மற்றவர்களை விட நாம் அதிகமாக நேசிக்கப்படுகிறோம் என்று அர்த்தங்கொள்ளவும் அல்ல.

### தொடர்ந்து வளர்ச்சி அடையுங்கள்

தயவு கிடைக்கும் ஒரு பருவமானது நாம் அனுபவித்து மகிழ்வதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் கூட, அது தேவனுடனான நமது பயணத்தில் “அத்தோடு நிறுத்திவிடும் ஒரு இடம்” அல்ல. நாம் தொடர்ந்து மகிமையின்மேல் மகிமையடைந்து அவருடைய சாயலாக மாற்றப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தயவின் ஒவ்வொரு பருவமும் தேவனில் வளரும்படிக்கு அதிகமான உயரங்களுக்கும் ஆழத்தின் ஆழங்களுக்கும் நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்ல வேண்டும். அவருடைய ராஜ்யத்தின் நிமித்தமாக பிரதிஷ்டை, ஒழுக்கம் மற்றும் பலி ஆகியவற்றின் பெரிய நிலைகளுக்கு அது நம்மை அழைத்துச் செல்ல வேண்டும். அவர் எனக்கு எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறாரோ, அவ்வளவு அதிகமாக நான் பலிபீடத்தின் மீது என்னையே வைத்துவிடுகிறேன்.

### கொடுக்கப்பட்டதைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

தயவு பாதுகாக்கப்பட வேண்டும். தேவன் கொடுத்ததை நாம் முறையாகப் பாதுகாக்க வேண்டும். தேவன் நமக்கு வழங்கிய நன்மையை பேரழிவுக்கான காரணங்களாக மாற்ற முற்படும் ஒரு சத்துரு நமக்கு இருக்கிறான். சத்துரு திருடவும், கொல்லவும், அழிக்கவும் முயல்கிறான். தாவீது ராஜா

மாபெரும் வெற்றியைக் கண்டிருந்தபோதுதான், சிறிது காலம் "தன்னைக் காத்துக்கொள்ள" முடிவு செய்த வேளையில், அவன் பத்சேபாளுடன் பாவத்தில் விழுந்தான். எனவே, நம் வாழ்வில் அளிக்கப்பட்டிருக்கிற தயவைக் காத்துக்கொள்ள நாம் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். பொதுவாக, தயவு எல்லா வகையான ஜனங்களையும் நம் வசமாக ஈர்க்கிறது. அவர்கள் அனைவரும் சரியான நோக்கத்துடன் வருவதில்லை. பலர் தங்கள் சொந்த சுயநல நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளும்படி, நம் வாழ்வின் நன்மைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணத்துடன் வருகிறார்கள். தயை பெறும் பருவத்திற்குள் நீங்கள் பிரவேசிக்கும்போது, உங்களது "கூட்டாளிகள்" மற்றும் "சம்பந்தப்பட்டவர்கள்" குறித்து கவனமாக இருங்கள். எல்லாவற்றையும் சுத்தமாகவும் மாசற்றதாகவும் வைத்திருங்கள். சமரசம் செய்ய மறுத்து, எப்போதும் வெளிச்சத்தில் நடந்துகொள்ளுங்கள். அவர்கள் உள்ளத்தின் நோக்கங்கள், வாழ்வின் உதாரணங்கள் அல்லது தரநிலைகள் தேவனுடைய வார்த்தைக்கு ஒத்துப்போகாத பட்சத்தில், அவர்களிடமிருந்து விலகி இருங்கள்.

## அடுத்த தலைமுறைகளுக்கு அதைக் கொண்டு செல்லுங்கள்

தயவு என்பது நாம் பொறுப்பேற்க வேண்டியதும் அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டுசெல்ல வேண்டியதுமான ஒரு மரபாகும். தேவனுடைய நன்மையைப் பற்றியும், அவருடைய நன்மைக்கு நல்ல உக்கிராணக்காரர்களாக நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் நமக்குப் பின்வருபவர்களுக்கு நாம் கற்றுக்கொடுக்கும்போது, நாம் அனுபவித்த தயவை அவர்கள் பெற்றுக்கொண்டு, ஓட்டத்தை ஓடும்படி, அவர்களை நிலைநிறுத்துகிறோம். நாம் தெய்வீக தயவை அனுபவித்துவிட்டு, தெய்வீக தயவில் நடக்க என்ன செய்ய வேண்டும் என்பதை அடுத்த தலைமுறைகள் புரிந்துகொள்ளும்படி அவர்களுக்கு உதவத் தவறினால், நம்மிடம் உள்ள அனைத்தும் நிச்சயமாக வீணாகி

மங்கிவிடும். இருப்பினும், தெய்வீக தயவில் நடப்பது எப்படி என்று அடுத்தடுத்த தலைமுறைகளுக்குப் பயிற்றுவித்தால், நம்மில் ஆரம்பித்த தயவு தொடர்ந்து வளரும், பெருகும் மற்றும் அடுத்து வரும் தலைமுறைகளுக்கான தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறும்.

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற

விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word–The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work–Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.


**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

தேவன் ஒவ்வொரு நபரையும் ஒரே மாதிரியாக நேசிக்கிறார் மற்றும் நபர்களை உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று மதிப்பிடுவதில்லை. இருப்பினும், மனுஷர்களை அவர் கையாளும்போது, தேவன் சில தனி நபர்களிடத்திலோ அல்லது ஜனக் குழுக்களின் மீதோ ஒரு சில குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட பருவங்களில் அல்லது அவர்களது வாழ்க்கையின் சில தருணங்களில் தெய்வீக தயவை வெளிப்படுத்துவதை நாம் காணலாம்.

தெய்வீக தயவு என்பது ஒரு நபர் மீது பொழிந்தருளப்படும் தேவனுடைய ஈவாகும், மேலும் அது செல்வாக்கு, ஜனங்கள், இடங்கள் அல்லது காரியங்களை எளிதில் அணுகுவதற்கான வாய்ப்பையும், விசேஷித்த வாய்ப்புகள், மேன்மை மற்றும் தெய்வீக இடைபடுதல் ஆகியவற்றையும் அந்த நபருக்குத் தருகிறது. இதற்காகத்தான், நாம் எதிர்பார்க்கும் வகையில் தேவனிடமிருந்து தெய்வீக தயவைப் பெற்றுக்கொள்வதற்கு நான் உங்களை விழிப்படையச் செய்ய விரும்புகிறேன்.

All Peoples Church & World Outreach
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org